ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/28 - 2022 දෙසැම්බර් මස 14 වැනි බදාදා - 2022.12.14

*2310/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரொஷான் ரணசிங்க** (பா. உ.),
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2022, திசெம்பர் 14.*

**ஒழுங்குவிதிகள்**

அவ்வப்போது திருத்தஞ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள், விளையாட்டுக்களுக்கு தைரியத்தினை அளித்தல், விளையாட்டினை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் பொருட்டும் விளையாட்டின், விளையாட்டு வீர வீராங்கனைகளின் மற்றும் விளையாட்டில் ஈடுபடுவோரின் முன்னேற்றம் தொடர்பாகவும் அதனை கீழ்மட்டம் வரையில் கொண்டு செல்லும் விளையாட்டுக் கழகங்களின் உள்ளடக்கத்தினை தீர்மானித்தல் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்தலின் பொருட்டும் கீழ்வருமாறு மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

1A - G 38349 — 08 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1) அவ்வப்போது திருத்தஞ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் ஒற்றோர் மாதம் 27 ஆம் திகதிய மற்றும் 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் II ஆம் பகுதியின் 5 ஆம் ஒழுங்குவிதியின் (4) (ண) பந்தியினை நீக்கி அதற்குப் பதிலாக கீழே தரப்படும் பந்தியினைப் பிரதியிடுவதனால், கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

"(4) (ண) பொருளாளரை அல்லது உதவிப் பொருளாளரைத் தவிர அச் சங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட, மேம்படுத்தப்பட்ட, வழிநடாத்தப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட யாதேனும் பிரதான விளையாட்டுப் போட்டித் தொடரொன்றின்போது அல்லது போட்டியொன்றின்போது, தேசிய விளையாட்டுப் பெருவிழா போட்டித் தொடரொன்றின்போது அல்லது போட்டியொன்றின்போது, அக் குறிப்பிட்ட விளையாட்டு சம்பந்தமாக குழு விளையாட்டொன்று தொடர்பாக இரண்டு தடவைகளுக்கு மேற்பட்ட தடவைகள் அல்லது யாதேனும் தனியாள் நிகழ்ச்சியொன்று தொடர்பாக அல்லது விளையாட்டொன்று தொடர்பாக ஒரு தடவைக்கு மேற்பட்ட தடவைகள் பங்குபற்றாதிருப்பின் அல்லது தேசிய மட்ட விளையாட்டு வீரனொருவனாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச போட்டியொன்றில் இலங்கையினைப் பிரிதிநிதித்துவப்படுத்தியிராது விடின் மற்றும் அது தொடர்பாக ஏற்புடையதாகும் வண்ணம் விநியோகிக்கப்பட்ட சான்றிதழொன்று தன்வசம் இல்லாது விடின்,"

2) (i) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (ii) ஆம் பந்திக்கு மேதிகமாக கீழே தரப்படும் பந்தியினை பிரதியிடுவதனால்;

(ii) (அ) ஏற்புடைய விளையாட்டினை மேம்படுத்துதல், கூறப்பட்ட விளையாட்டுக்களுக்கு ஏற்புடையதாக வருடாந்தம், பிரதேசங்களுக்கு இடையேயான, மாவட்டங்களுக்கு இடையேயான, மாகாணங்களுக்கு இடையேயான, இரண்டிற்கு குறையாத எண்ணிக்கையான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், விளையாட்டு வீரர்களின் பயிற்சி மற்றும் நிலையான குழாம்களை நடாத்திச் செல்லல்;

(iii) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (xiv) ஆம் பந்தியினை நீக்கி, கீழே தரப்படும் பந்தியினை அதற்குப் பதிலாக பிரதியிடுவதனால்;

7 (xiv) வருடாந்தப் பொதுக் கூட்டத்தை நடாத்துதல்; மற்றும்

(அ) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தேர்தலின் வாயிலாக நிறைவேற்றுக் குழுவானது நியமிக்கப்பட்டவுடனேயே நிறைவேற்றுக் குழுவின் வாயிலாக தொழில்நுட்பக் குழுவின், நிதிக் குழுவின், ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினர்களை இரண்டு (02) வருட காலத்திற்கு தெரிவு செய்து நியமித்துக் கொள்ளப்படுதலின் பொருட்டு சகல உறுப்பினர் இணைப்பமைப்புக்களுக்கும் தெரியப்படுத்தி பெயர் முன்மொழிவுகளைப் பெற்ற தகைமைகளின் அடிப்படையில் நியமித்துக் கொள்ளுதல்.

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் /சம்மேளனங்களின் தெரிவுக் குழுக்களை இரண்டு (02) வருட காலங்களுக்கு நியமித்துக் கொள்ளுவதன் பொருட்டு, ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் தனது விளையாட்டுச் சங்கத்துடன்/சம்மேளனத்துடன் இணைந்த சகல உறுப்பினர் நிறுவனங்களுக்கும் உகந்த விதமாக தெரியப்படுத்தி பெயர் முன்மொழிவுகளைப் பெற்று, நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஒன்றின் வாயிலாக மிகப் பொருத்தமான பத்து (10) உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ள வேண்டியதுடன், தெரிவு செய்துகொள்ளப்பட்ட பெயர் முன்மொழிவுப் பத்திரத்துடன்கூடிய விண்ணப்பப்படிவத்தினை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் பிரதியொன்றுடன் தேசிய தெரிவுக் குழுவிற்கும் அனுப்பி வைத்தல், தேசிய தெரிவுக் குழுவினால் அப் பெயர் முன்மொழிவுகள் தொடர்பாக அதனது குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப்பட்டியலினை தேசிய விளையாட்டுச் சபைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் தேசிய விளையாட்டுச் சபையினால் அப் பரிந்துரையானது, மேலும் கவனத்திற் கொள்ளப்பட்டு சபையின் பரிந்துரையுடன் அமைச்சின் செயலாளர் ஊடாக அனுமதியின் பொருட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்தல்; மற்றும்,

(இ) தேர்தல் குழுவின் உறுப்பினர்களை தெரிவுசெய்து நியமித்துக் கொள்ளலின் பொருட்டு விசேட பொதுக் கூட்டமொன்றினை நடாத்துதல்.

(iv) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (xx) ஆம் பந்திக்கு மேலதிகமாக (xx) (அ), (xx) (ஆ) மற்றும் (xx) (இ) என கீழே தரப்பட்டுள்ள பந்திகளைச் சேர்ப்பதனால்;

"(xx) (அ) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் ஆகவும் கீழுள்ள அழகான பிரதேச விளையாட்டுக் கழகங்களிலிருந்து மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள், தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஏனைய உறுப்பினர் பிரதான விளையாட்டுச் சங்கங்கள் வரையில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகள் எளிதாக அமைவதன் பொருட்டு விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(xx) (ஆ) மாவட்ட விளையாட்டுச் சங்கங்கத்தினால் தனது அதிகார பிரதேசத்தின் ஏற்புடைய விளையாட்டினை மேம்படுத்துதல், வருடாந்தம் இரண்டிற்கு குறையாத எண்ணிக்கையில் பிரதேச போட்டித் தொடர்களை நடாத்துதல், விளையாட்டு வீரர்களின் பயிற்சி மற்றும் நிலையான குழாம்களை நடாத்திச் செல்லல் மேற்கொள்ளப்படுகின்றதா என்பன பற்றியும் அத்துடன் மாவட்டச் சங்கத்தினால் உகந்த முறைமையியலின் வாயிலாக பிரதேச விளையாட்டுக் கழகங்களினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பன பற்றி தேடிப் பார்த்து விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல்.

(xx) (இ) மாகாண விளையாட்டுச் சங்கங்கத்தினால் தனது அதிகார பிரதேசத்தினுள் இரண்டிற்கு குறையாத எண்ணிக்கையில் மாவட்டங்களுக்கு இடையேயான போட்டித் தொடர்களை வருடாந்தம் நடாத்தியிருத்தல், விளையாட்டு வீரர்களின் பயிற்சி மற்றும் நிலையான மாகாண விளையாட்டுக் குழாம்களை நடாத்திச் செல்லல், தனது அதிகாரப் பிரதேசத்தினுள் எற்புடைய விளையாட்டினை மேம்படுத்துதல், மாகாண விளையாட்டுச் சங்கங்களினால் மாவட்ட விளையாட்டுச் சங்க ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை உகந்த விதமாக செய்யப்படுகின்றதா என்பன பற்றிய தகவல்களை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல்.

(3) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (xxv) ஆம் பந்திக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள புதிய பந்தியினை சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

7 (xxvi)

அங்கவீனத்துடன் கூடிய நபர்கள் தொடர்பாகவான தேசிய விளையாட்டுச் சங்கமானது தனது விளையாட்டிற்கு ஏற்புடைய விசேட தேவைகள் கொண்ட நபர்களினால் (பார்வைப் புலனற்ற, கேட்டல் புலனற்ற, உடலியல் அங்கவீனங்கள் போன்ற) உள்ளடக்கப்பட்ட இணைந்த விளையாட்டுக் கழகங்களை உட்சேர்த்துக் கொள்ளுதல் பொறுப்பிற்குரியதாகும்.

(4) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (xxvii) ஆம் பந்திக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள புதிய பந்தியினை சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

7 (xxvii)
தேசிய விளையாட்டுச் சங்கங்கள் சர்வதேச உடன்படிக்கைகள், சர்வதேச காசுப் பரிவர்த்தனைகள் என்பனவற்றில் ஈடுபடும் போது, நாட்டின் நிதிச் சட்டங்களுக்குக் கீழ்ப்பட்டு, நிதி ஒழுக்கத்துடனும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்பட வேண்டியதுடன், அவ்வாறான உடன்படிக்கைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளரது முழுமையான பரிந்துரைக்குக் கீழ்ப்பட்டதாக, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(5) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் VI ஆம் பகுதியின் பொருள்கோடலின் கீழ் 'தேசிய விளையாட்டுச் சங்கம்' என்பதனால் வழங்கப்படும் பொருள்கோடலினை நீக்கி, கீழ் தரப்பட்டுள்ள பொருள்கோடலினை பிரதியிடுவதன் வாயிலாக;

'தேசிய விளையாட்டுச் சங்கம்' என்பதனால் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் பெயரிடப்பட்டுள்ள விளையாட்டொன்றினை இல்லாவிடின் விளையாட்டுக்கள் தொகுதியொன்றினைக் கட்டுப்படுத்தும் சங்கமொன்று அல்லது ஒன்றிணைந்த சங்கமொன்று அல்லது சபையொன்றெனக் கருதப்படும்.

அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கமும்/சம்மேளனமும், பிரதேச விளையாட்டுக் கழகங்களின் சேர்க்கையால் உருவாகும் மாவட்ட விளையாட்டுச் சங்கங்களும், மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் சேர்க்கையால் உருவாகும் மாகாணச் சங்கங்களின் மற்றும் பிரதானமாக விளையாட்டுக்களுக்கு பங்களிப்பினை நல்கும் ஏனைய விசேட சங்கங்களினால் அல்லது ஒழுங்கமைப்புக் களினால் ஏற்படும் சங்கமாக இருத்தல் வேண்டும்.

தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் இலங்கையில் நடைமுறையிலுள்ள விதிகள், விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழாக, தனது சங்கத்திற்கு ஏற்புடைத்தான அமைப்பு விதியொன்றினை ஆக்கிக் கொள்ள வேண்டியதுடன், அவ் அமைப்பு விதியினை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்காகச்

சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் ஏனைய சங்கங்களினால் மேலே அனுமதிக்கப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கங்களின் அமைப்புவிதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அவ்வச் சங்கத்திற்கு வரையறைக்குட்பட்ட பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண அமைப்பு விதியானது இருத்தல் கூடாது.

கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் VI ஆம் பகுதியின் பொருள்கோடலின் கீழ் 'தேசிய விளையாட்டுச் சங்கம்' எனும் பொருள்கோடலுக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள புதிய பொருள்கோடலினை உட்சேர்ப்பதன் வாயிலாக; கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

'பிரதேச விளையாட்டுக் கழகங்கள்' என்பதனால் ஏதேனும் பிரதேச செயலகப் பிரிவொன்றினுள் அவ் விளையாட்டிற்கு ஏற்புடையதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் எனக் கருதப்படும்.

'மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள்' என்பதனால் அவ்வவ் மாவட்டங்களினுள் அமைந்துள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளும் தழுவப்படும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச விளையாட்டுக் கழகங்களின் சேர்க்கை எனக் கருதப்படும். பிரதேச விளையாட்டுக் கழகங்களின் வகைக்கூறலானது மாவட்ட விளையாட்டுச் சங்கங்களிடத்தும் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்களிடத்தும் ஆக வேண்டியதுடன், அவற்றை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு மாவட்ட, மாகாண மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்படும்.

'மாகாண விளையாட்டுச் சங்கங்கள்' என்பதனால் அவ்வவ் மாகாணங்களினுள் அமைந்துள்ள அனைத்து மாவட்டங்களினதும் பிரதேச செயலகப் பிரிவுகள் தழுவப்படும் விதத்தில், பிரதேச விளையாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் சேர்க்கை எனக் கருதப்படும். மாவட்டச் சங்கங்களின் வகைக்கூறல் மாகாண விளையாட்டுச் சங்கங்களிடத்தும் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கங்களிடத்தும் ஆக வேண்டியதுடன், அவற்றை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு மாகாண மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்படும்.

'விசேட சங்கங்கள்' என்பதனால் ஈடுபடும் பொதுச் சேவைகள், மக்கள்மயப்படுத்தற் சேவைகள், வர்த்தக சேவைகள், பாதுகாப்புச் சேவைகள் மற்றும் ஒன்றிணைந்த பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம், மகாவலி விளையாட்டுச் சங்கம், இளைஞர் சேவைகள் விளையாட்டுச் சங்கம் ஆகியவாறான விளையாட்டுச் சங்கங்கள் எனக் கருதப்படும்.

(6) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் அட்டவணையின் 'ர' பந்திக்கு மேலதிகமாக கீழே 'ல' பந்தியினை உட்சேர்ப்பதன் வாயிலாக கூறப்பட்ட அட்டவணையானது இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

"ல" அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களின் அல்லது சம்மேளனங்களின் பொருட்டு பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் சங்கங்கள் தொடர்பாக வாக்குரிமையானது;

i. பிரதேச விளையாட்டுக் கழகமொன்றிற்கு ஓர் வாக்கிற்கான உரித்துடைமை உள்ளதுடன், அவ் வாக்குகளின் சேர்க்கையினால் மாவட்ட விளையாட்டுச் சங்கங்கத்தினை தெரிவுசெய்து நியமித்துக் கொள்ள வேண்டியதுடன், அவ்வாறான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மாவட்டச் சங்கமொன்றிற்கு தேசிய சங்கங்களின் தேர்தலின் போது ஓர் வாக்கும்;

ii. அவ்வவ் மாகாணத்தினுள் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டுச் சங்கமொன்றிற்கு ஓர் வாக்கிற்கான உரித்துடைமை உள்ளதுடன், அத்தகைய மாவட்ட வாக்கினால் மாகாண விளையாட்டுச் சங்கங்களை நிறுவிக் கொள்ள வேண்டியதுடன், அவ்வாறான மாகாண விளையாட்டுச் சங்கமொன்றிற்கு தேசிய சங்கங்களின் தேர்தலின் போது ஓர் வாக்கும்;

iii. அனைத்து விளையாட்டுக்களுக்கும் முன்னோடி விளையாட்டுக் கழகங்கள் இருப்பின் அவ் விளையாட்டுக் கழகங்களின் பொருட்டு ஓர் வாக்கும்,

iv. விளையாட்டுக்களில் ஈடுபடும் விசேட சங்க வகைக்குள் கருதப்படும் பொதுச் சேவைகள், மக்கள்மயப்படுத்தற் சேவைகள், வர்த்தக சேவைகள், பாதுகாப்புச் சேவைகள் மற்றும் ஒன்றிணைந்த பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம், மகாவலி விளையாட்டுச் சங்கம், இளைஞர் சேவைகள் விளையாட்டுச் சங்கம் ஆகிய வற்றிற்குரிய அமைப்பு விதிகளினுள் உறுப்புரிமை தொடர்பாக ஓர் வாக்கும் ;

என்றவாறு ஆகும் வண்ணம் சங்கங்களின் அமைப்பு விதிகளினுள் ஏற்பாடுகளை உட்சேர்க்க வேண்டியதுடன் அதனடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் ;

உறுப்பினர் விளையாட்டுச் சங்கங்களின் பொருட்டு வாக்குரிமையானது கிடைக்கப்பெறுவதற்கு அல்லது வாக்குரிமையினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆகக் குறைந்த தேவைப்பாடுகளையாவது பூரத்திசெய்திருத்தல் வேண்டும்.

i. வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை உரிய தினத்தில் செலுத்தியிருத்தல்.

ii. தேசிய சங்கத்தில்/சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டு அல்லது உறுப்புரிமையினைப் பெற்று இரண்டு வருட காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

iii. ஏற்புடைய பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

iv. சகல உறுப்பினர் சங்கமும் தமது சங்கத்துடன், ஒழுங்கமைப்புடன் இணைந்த உறுப்பினர் சங்கத்தின் தேர்தலுக்குரிய வருடத்தின் ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து சனவரி மாதம் 01 ஆந் திகதிக்குள் பொதுக் கூட்டத்தினைக் கூட்டி நிறைவுறுத்தியிருக்க வேண்டியதுடன், சகல வருடங்களிலும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு பொதுக் கூட்டங்களை நடாத்தியிருத்தல் வேண்டும்.

v. பிரதேச விளையாட்டுக் கழகங்கள் தமது வருடாந்த அறிக்கை, பொதுக்கூட்ட அறிக்கை, தேர்தல் தொடர்பான அறிக்கை மற்றும் பதவி தாங்குநர்களின் சகல விபரங்கள் அடங்கிய அறிக்கை மற்றும் உறுப்பினர்களின் அறிக்கை, கணக்கு அறிக்கை என்பனவற்றை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரிடம் அனைத்து வருடத்திலும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் கையளித்திருத்தல்.

vi. தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் வருடாந்தம் ஒழுங்குசெய்யப்படும் போட்டித் தொடர்களிடையே ஆகக் குறைந்தது இரண்டு போட்டித் தொடர்களிற்கு குழுக்களை அல்லது வீரர்களை பங்குபற்றச் செய்திருத்தல்.

vii. பயிற்சி முகாம்கள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகள் என்பவற்றை வருடமொன்றில் தொடர்ச்சியாக நடாத்தியிருத்தல். (ஆகக் குறைந்தது பத்தினை (10) நடாத்தியிருத்தல்.

viii. விளையாட்டின் ஒழுக்கத்தினை அல்லது சங்க அமைப்பு விதியின் ஒழுக்கத்தினை மீறுதல் தொடர்பாக ஏற்புடைய வருடத்தின் தடைக்கு உட்படாதிருத்தல்.

ix. தமது மாவட்டத்தினுள்ளோ அல்லது மாகாணத்தினுள்ளோ விளையாட்டுக் கழக மட்டத்தில் ஆண், பெண், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வீரர் குழாம்களையும் அத்துடன் பயிற்சிகளையும் நடாத்திச் செல்லல்.

x. முன்னோடி விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விசேட சங்கங்களுக்குச் சொந்தமான தனது விளையாட்டிற்கு ஏற்புடைய அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்திருத்தல். (விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், டென்னிஸ் மைதானம் போன்ற).

xi. தனது விளையாட்டிற்கு ஏற்புடைய விசேட தேவைகள் கொண்ட நபர்களினால் (பார்வைப் புலனற்ற, கேட்டல் புலனற்ற, உடலியல் அங்கவீனங்கள் போன்ற) உள்ளடக்கப்பட்ட இணைந்த விளையாட்டுக் கழகங்களை உட்சேர்த்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், யாதேனும் உறுப்பினர் சங்கமொன்றினால் முன்னர் கூறப்பட்ட வசதிகளைப் பூரணப்படுத்தியிராது விட்டால், வாக்கு அதிகாரத்தினை அல்லது உறுப்புரிமையை தற்காலிகமாக அல்லது முழுவதுமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், இலங்கையின் சகல கிராம அலுவலர் பிரிவினுள்ளும் விளையாட்டினை மேம்படுத்துவதன் பொருட்டு, பிரதேச விளையாட்டுக் கழகங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். விளையாட்டு மீது விருப்பு கொண்ட சகல பிரசைகளுக்கும் தமது அபிப்பிராயத்தின் பேரில் விளையாட்டொன்றில் ஈடுபடும் மனித உரிமையினைப் பெற்றுக்கொடுத்தல் அவ் விளையாட்டுச் சங்கத்தின் பொறுப்பாகும். ஏதேனும் உறுப்பினர் சங்கமொன்றினால் முன்னர் குறிப்பிட்ட வசதிகள் அனைத்தினையும் பூரத்திசெய்யாதிருப்பின்,

இவ் ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து A தரமுடைய சங்கமொன்று ஐந்து (05) வருட காலத்தினுள் முன்னர் குறிப்பிட்ட வசதிகளை பூரணப்படுத்திக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். (ஆகக் குறைந்தது வருடமொன்றினுள் மாவட்டங்கள் மூன்றினது பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாவட்ட சங்கங்கள் நிறுவப்படல் மற்றும் தனது சங்கத்திற்கு எற்புடைய விளையாட்டு தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளல்).

இவ் ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து B தரமுடைய சங்கமொன்று எட்டு (08) வருட காலத்தினுள் முன்னர் குறிப்பிட்ட வசதிகளை பூரணப்படுத்திக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். (ஆகக் குறைந்தது வருடமொன்றினுள் மாவட்டங்கள் இரண்டினது பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாவட்ட சங்கங்கள் நிறுவப்படல் மற்றும் தனது சங்கத்திற்கு ஏற்புடைய விளையாட்டு தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளல்).

இவ் ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து C தரமுடைய சங்கமொன்று பத்து (10) வருட காலத்தினுள் முன்னர் குறிப்பிட்ட வசதிகளை பூரணப்படுத்திக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். (ஆகக் குறைந்தது வருடமொன்றினுள் மாவட்டமொன்றின் பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாவட்ட சங்கங்கள் நிறுவப்படல் மற்றும் தனது சங்கத்திற்கு எற்புடைய விளையாட்டு தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளல்).

மேற்கூறிய தேவைப்பாடுகளை உகந்த விதமாக பூரணப்படுத்தியிராத உறுப்பினர் சங்கங்கள் தொடர்பாக வாக்கு அதிகாரத்தினை அல்லது உறுப்புரிமையை தற்காலிகமாக அல்லது முழுவதுமாக இடைநிறுத்துவதற்கு விளையாட்டுப் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் ;

(7). 2020 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 2194/54 ஆம் இலக்க மற்றும் 1986 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 20 ஆந் திகதிய 385/7A ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் வாயிலாக திருத்தஞ் செய்யப்பட்ட 1974 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 130 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்குபற்றுவோரைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குவிதிகளில் 6(க) பிரிவிற்கு மேலதிகமாக 6(ங) பிரிவினை சேர்ப்பதன் வாயிலாக கூறப்பட்ட ஒழுங்கு விதிகளானது கீழே காட்டப்படும் வண்ணம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

6 (ங) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்குகொள்ளும் விளையாட்டு வீர வீராங்கனைகள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் இலங்கையினுள்ளே அல்லது வெளிநாடொன்றில் மேற்கொள்ளும் ஒழுக்கத்திற்கு முரணான நடத்தையொன்றை அல்லது இலங்கையானது அபகீர்த்திக்கு உள்ளாகும் செயல் அல்லது தனது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்பவற்றினை அலட்சியம் செய்தல் என்பன தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் என்போரால் நியமிக்கப்படும் முறையான ஆய்வுக் குழுவொன்றின் வாயிலாக வழங்கப்படும் பரிந்துரையின் பிரகாரம் கூறப்பட்ட அத்தகைய விளையாட்டு வீரன்/ விளையாட்டு வீரர்கள், விளையாட்டு வீராங்கனை /விளையாட்டு வீராங்கனைகள், முகாமையாளர்/முகாமையாளர்கள் அல்லது ஏனைய உத்தியோகத்தர்/உத்தியோகத்தர்களுக்கு எதிராக அல்லது சங்கத்திற்கு எதிராக தண்டனையினை, தடையினை அல்லது இடைநிறுத்தத்தினை நடைமுறைப்படுத்த முடியும்.

EOG 12-0206

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.